CAREERINDIA

**91.** __________ கணவாய் __________ நாட்டுக்கும், __________ நாட்டுக்கும் இடையிலான __________ உதவியாக இருந்தது.

(1) மலைதாழ்ந்த, சேர, கொங்கு, போருக்கு
(2) பாலைக் காட்டுக், சேர, துளு, போக்குவரத்துக்கு
(3) பாலைக் காட்டுக், சேர, கொங்கு, போக்குவரத்துக்கு
(4) பாலைக் காட்டுக், சேர, சோழ, போக்குவரத்துக்கு

**92.** மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கு __________ சேர நாடும் __________ இருந்தன.

(1) கிழக்கில், காவிரியாறும்
(2) கிழக்கில், துளு நாடும்
(3) மேற்குப் பகுதியில், துளு நாடும்
(4) மேற்கில், கொங்கு நாடும்

**93.** __________ கொங்கு நாடு __________ இருந்தது, அதன் __________ பாண்டிய நாடு இருந்தது.

(1) கடைச் சங்க காலத்தில், உள்நாட்டுப் பகுதியாக, எல்லைக்குள்
(2) கடைச் சங்க காலத்தில், எல்லையாக, மேற்குப் பகுதியில்
(3) கடைச் சங்க காலத்தில், பரந்து விரிவாக, மேற்கு எல்லையில்
(4) கடைச் சங்க காலத்தில், பரந்து விரிவாக, தெற்கு எல்லையில்

**94.** கொங்கு நாட்டின் __________ எல்லையில் __________ தொண்டை நாடும் இருந்தன, அதன் __________ காவிரியாறு வரை இருந்தது.

(1) தெற்கு, சோழ நாடும், வடக்கு எல்லை
(2) கிழக்கு, சோழ நாடும், வடக்கு எல்லை
(3) வடக்கு, சோழ நாடும், தெற்கு எல்லை
(4) கிழக்கு, சேர நாடும், வடக்கு எல்லை

**95.** பழனி மலை __________ என வழங்கப்பட்டது, கொங்கு நாட்டுடன் சேர்ந்திருந்த பிரதேசம் __________.

(1) பொதினி, யானை மலை (2) வையாவி நாடு, யானை மலை
(3) யானை மலை, பொதினி மலை (4) பாலைக் காடு, யானை மலை

**96.** துளு நாடு இப்போது __________ என்றும், __________ என்றும் வழங்கப்படுகிறது, சேர நாடு __________ என்று பெயர் பெற்றுள்ளது.

(1) கன்னட நாடு, சேர நாடு, கேரளம்
(2) மைசூர், கன்னடம், மலையாளம்
(3) தென் கன்னடம், வட கன்னடம், கேரள நாடு
(4) தென் கன்னடம், வட கன்னடம், மலையாளம்

www.careerindia.com

CAREERINDIA

**97.** தொண்டை நாடு, __________ எனவும் அழைக்கப்பட்டது, __________ தொண்டை நாடும் __________ பகுதியில் அமைந்துள்ளன.

(1) அருவா நாடு, கொங்கு நாடும், உள்நாட்டுப்
(2) அருவா நாடு, சோழ நாடும், கிழக்குக் கடற்கரைப்
(3) சோழ நாடு, அருவா நாடும், கிழக்குக் கடற்கரைப்
(4) கடல் சூழ்ந்த நாடு, சோழ நாடும், கிழக்குக் கடற்கரைப்

**98.** சேலம், __________ பகுதிகளை அடக்கிய __________ கடற்கரையற்ற __________ அமைந்திருந்தது.

(1) கோயம்புத்தூர், இடை நாடு, எல்லை நாடாக
(2) கோயம்புத்தூர், பாண்டிய நாடு, உள்நாட்டில்
(3) கோயம்புத்தூர், கொங்கு நாடு, உள்நாடாக
(4) கோயம்புத்தூர், கொங்கு நாடு, எல்லைப் பகுதியாக

**99.** தமிழகம் கடைச் சங்க காலத்தில் __________ பிரிந்திருந்தது, அவற்றில், __________ , __________ இரண்டும் மேற்குக் கடற்கரையோரம் அமைந்திருந்தன.

(1) நில அடிப்படையில், சேர நாடு, பாண்டி நாடு
(2) பல நாடுகளாகப், பாண்டி நாடு, சோழ நாடு
(3) ஆறு நாடுகளாகப், கொங்கு நாடு, சேர நாடு
(4) ஆறு நாடுகளாகப், துளு நாடு, சேர நாடு

**பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண். 100 - 105)**

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப் பைங்கூழ் முளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை,
இனியநற்றமிழே நீதான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின்வாழ்வாய் மலர்ந்ததன்றோ ?

இசையினைக் காணு கின்றேன்;
எண் நுட்பம் காணு கின்றேன்
அசைக்கொணாக் கல்தச் சர்கள்
ஆக்கிய பொருள்காண் கின்றேன்;
பசைப்பொருட் பாடல் ஆடல்
பார்க்கின்றேன்; ஓவியங்கள்
நசையுள்ள மருந்து வன்மை
பலபல நான்காண்கின்றேன்.

**100.** புதிய நாளைக்கு முன்பு நிலத்தில் __________ சூழ்ந்திருந்தது, பிறகு அது __________.

(1) புனல், முளைத்தது
(2) புனல், பெருகியது
(3) நீர், வடிந்தது
(4) நீர், முளைத்தது

www.careerindia.com

CAREERINDIA

**108.** வீரா ஒரு ஏழு மாதக் குழந்தை. அக்குழந்தை உயிர், மெய் எழுத்துக்களைச் சேர்த்துப் பேச குரல் எழுப்புகிறது. அக்குழந்தை தொடர்புகொள்ள முற்படுவது கீழ்க்கண்டனவற்றுள் எதில் அடங்கும் ?

(1) மொழியியல் பேச்சு
(2) ஒலிக் குறிப்புகள்
(3) தெளிவற்ற பேச்சு
(4) கூலிங்

**109.** படித்தல் திறனுக்கு எழுத்துக்களில் தொடங்குவதை விட சொற்களிலும், கதைகளிலும் தொடங்குவது நன்று என்பதை கீழ்க்கண்ட எந்த கூற்று நியாயப்படுத்தவில்லை ?

(1) தனித்த எழுத்துக்களை மனனம் செய்வது சொற்களை மனனம் செய்வதைவிட கடினமானது.
(2) முதலில் படிக்கத் தொடங்குபவர்கள் சிறிய தொகுதியைவிட பெரிய தொகுதியில் கவனம் செலுத்துவர்.
(3) சொற்களும், உரைப்பகுதிகளும் ஒரு கருத்தை உருவாக்கும். ஆனால், வெறும் எழுத்துக்களால் இது முடியாது.
(4) சொற்களும், உரைப்பகுதிகளும் மிகவும் சுவாரஸ்யமானவை. எழுத்துக்களால் இது முடியாது.

**110.** 'சொற்பிரயோகம்' என்றால் என்ன ?

(1) வாசிப்பவருக்குப் புதிதாகத் தோன்றும் சொற்கள்
(2) கேட்டவுடன் புரிந்துகொள்கின்ற சொற்கள்
(3) வரிகளுக்கு அப்பால் கவனிக்கப்படுகின்ற சொற்கள்
(4) பேசும்போதும், எழுதும்போதும் பயன்படுத்துகின்ற சொற்கள்

**111.** ஒரு பேச்சுக்குழுவில் S என்பது இருவேறுபட்ட சமூகப் பொருளாதார பின்புலம் கொண்ட மக்களால் வேறு வேறு விதமாக உச்சரிக்கப்படுகிறது. இந்த எடுத்துக்காட்டு :

(1) ஒரு சமூக உளவியல் மாறி
(2) ஒரு சமூக மொழியியல் மாறி
(3) ஒரு நடைமுறை சார்ந்த மாறி
(4) ஒரு சமூகக் கலாச்சார மாறி

**112.** கீழ்க்கண்டனவற்றுள் எது புரிந்து படித்தல் உத்தி தொடர்பான தவறான கூற்று ?

(1) மேலோட்டமாகப் படிப்பதற்கும், ஆழ்ந்து படிப்பதற்கும் உரைகளின் மீதான விரைவான கண்ணோட்டம் தேவைப்படுகிறது.
(2) மேலோட்டம் என்பது விரைவாகப் படிப்பது. ஆழ்தல் என்பது குறிப்பிட்ட ஒன்றை கருத்தூன்றிப் படிப்பது.
(3) மேலோட்டம் ஊன்றிப் படிப்பது. ஆழ்தல் விரைவாகப் படிப்பது.
(4) மேலோட்டம் மீள்வாசிப்பிற்குப்பொருத்தமானது. ஆழ்தல் குறிப்பிட்ட ஒரு கேள்விக்கு பதிலளிக்க உதவுகிறது.

**113.** தாய்மொழியை அடிப்படையாகக் கொண்ட பன்மொழிச் சூழல் வலியுறுத்துவது :

(1) எல்லாக் குழந்தைகளும் இந்தியை முதன்மொழியாகப் படித்தல்
(2) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன்முதலில் பள்ளிக் கல்வியை தாய்மொழியில் தொடங்குதல்
(3) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன்முதலில் பள்ளிக் கல்வியை அந்தந்த மாநில மொழியில் தொடங்குதல்
(4) எல்லாக் குழந்தைகளுக்கும் முதன் முதலில் பள்ளிக் கல்வியை ஆங்கிலத்திலும், தாய் மொழியிலும் தொடங்குதல்

www.careerindia.com

CAREERINDIA

**130.** தமிழிலக்கியத்திற்கு __________ புதிதாக வந்த இலக்கிய __________ மேலைநாட்டுத் தொடர் பால் __________ அடைந்த __________ ஒன்று.

(1) புதினம், வளர்ச்சி, நன்மை, வடிவங்களில்

(2) புதினம், கோட்பாடு, தமிழ்மொழி, நன்மைகளில்

(3) புதினம், வடிவம், தமிழ்மொழி, நன்மைகளில்

(4) புதினம், வடிவம், இலக்கியம், முறைகளில்

**131.** __________ புதினங்கள், __________ புதினங்கள், __________ புதினங்கள், __________ புதினங்கள், வட்டாரப் புதினங்கள் தமிழில் நேரடியாக, பிறமொழித் தொடர்பின்றி எழுதப் படுபவை.

(1) துப்பறியும், வாழ்க்கைப், வரலாற்றுப், தழுவல்

(2) துப்பறியும், அரசியல், திரைக்கதைப், வரலாற்றுப்

(3) துப்பறியும், சமூகப், வரலாற்றுப், அறிவியல்

(4) மொழிபெயர்ப்புப், தழுவல், வரலாற்றுப், அறிவியல்

**132.** சாதிக் கொடுமைகளைச் சுட்டிக் காட்டும் __________ இரண்டு புதினங்கள் __________, __________ ரகுநாதனின் __________ கைத்தறி நெசவாளர் வாழ்வின் கொடுமைகளைச் சொல்வது.

(1) ஜெயகாந்தனின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

(2) அநுத்தமாவின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

(3) அகிலனின், வாழ்வு எங்கே, சந்திப்பு, பஞ்சும் பசியும்

(4) அகிலனின், பஞ்சும் பசியும், வாழ்வு எங்கே, சந்திப்பு

**133.** __________, __________, மீனவர்கள் போன்ற __________ மக்களின் வாழ்க்கை பற்றிய நாவல்கள் வெளிவர உந்துதலாக அமைந்தது __________.

(1) ஏழைகள், மலைவாழ் மக்கள், வீடற்ற, பஞ்சும் பசியும்

(2) ஏழைகள், மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட, பஞ்சும் பசியும்

(3) நெசவாளர்கள், மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட, வாழ்வு எங்கே

(4) ஏழைகள், மலைவாழ் மக்கள், சிறுபான்மை, மணல் வீடு

**134.** __________ எழுதிய __________ நிலத்தில் __________ தம்முடைய __________ குரல் கொடுப்பதைக் கதைப் பொருளாகக் கொண்டுள்ளது.

(1) பொன்னீலன், மணல் வீடு, உழைக்கும் மக்கள், அதிகாரத்துக்குக்

(2) ஜெயகாந்தன், கரிசல், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

(3) பொன்னீலன், கரிசல், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

(4) பொன்னீலன், பஞ்சும் பசியும், உழைக்கும் மக்கள், உரிமைக்குக்

www.careerindia.com

CAREERINDIA

**145.** கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வகையான மதிப்பீட்டு முறைகளில் எது சரியானது ?
(1) தொகுநிலை மதிப்பீடு கற்றலின் முன்னும், கற்றலின் போதும் செய்யப்படுகிறது.
(2) வளர்நிலை மதிப்பீடு மொழியின் செயல்பாட்டைவிட அதன் வடிவத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கிறது.
(3) தொகுநிலை மதிப்பீடு என்பது ஆண்டின் எல்லா விதமான மதிப்பீட்டின் கூடுதல்
(4) வளர்நிலை மதிப்பீடு கற்றலின் நிலைகளை தொடர்ந்து மதிப்பிடுகிறது.

**146.** கற்றலில் விலக்கலை அறிய பிழை ஆய்வு முக்கியமானது. ஏனென்றால் __________.
(1) பிழைகள் கருத்துருவாக்கத்தையும், நோக்கத்தையும் காட்டுகின்றன.
(2) கற்போரின் பொறுப்பற்ற நடத்தையினால் பெரும்பான்மையான பிழைகள் ஏற்படு கின்றன.
(3) பிழைகள் என்பது கற்றல் படிநிலையின் சாளரங்கள்.
(4) பிழைகள், கற்போரின் புரிந்து கொள்ளாமையை காட்டுகின்றன.

**147.** கீழ்கண்டனவற்றுள் எது மதிப்பீடு குறித்த சரியான கூற்று அல்ல ?
(1) இது ஆசிரியரால் மட்டுமே முடியும்
(2) மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை ஒட்டுமொத்தமாக வழங்குகிறது.
(3) மாணவர்களின் கற்றல் திறனைப் பற்றி ஒரு திடமான சான்றை வழங்குகிறது.
(4) மாணவர்களின் வேகமான முன்னேற்றத்தை பற்றி அறிய உதவுகிறது.

**148.** கீழ்க்கண்டனவற்றுள் எது கற்றலின் முக்கியமான களம் அல்ல ?
(1) செயல் (2) புரிதல்
(3) சமூகப் பொருளாதாரம் (4) உணர்தல்

**149.** கீழ்க்கண்டனவற்றுள் எது வளர்நிலை மதிப்பீட்டிற்கான உதாரணம் அல்ல ?
(1) ஆண்டு முழுவதும் சிறிய அளவிலான தேர்வு மற்றும் மீள் சரிபார்ப்பு என மதிப்பீட்டுத் திட்டங்கள்
(2) ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வாய்மொழித் தேர்வு, எழுதுதல் தேர்வு, பங்கேற்றல் போன்ற இடுபணி
(3) ஆண்டின் இறுதியில் பருவத்தேர்வு
(4) ஆண்டு முழுவதும் பத்தியைப் படித்து, புரிந்து விடையளித்தல் மற்றும் சிறிய அளவிலான இடுபணிகள்

**150.** 'p' -யை 'b' எனவும், '6' -யை '9' எனவும் படித்தலும், எழுதுதலும் பொதுவாகக் குழந்தைகள் செய்யும் தவறு என்பது :
(1) டைலெக்சியா (2) ஸ்டட்டர்ஸ் (3) அபாசியா (4) அனோமியா

www.careerindia.com

- o 0 o -

